**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நம்பிக்கையில்லா தீர்மானம் ஏற்பு

## விவாத தேதி பிறகு முடிவு செய்யப்படும்: மக்களவைத் தலைவர்

**புது தில்லி, ஜூலை 26:** மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா புதன்கிழமை ஏற்றுக் கொண்டார்.

அனைத்துக் கட்சிகளிடமும் ஆலோசனை நடத்திய பிறகு தீர்மானத்தின் மீது விவாதம் நடத்துவதற்கான தேதி முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 20-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. மணிப்பூர் வன்முறை குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி விளக்கமளிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன. அந்த விவகாரம் குறித்து விவாதிக்கத் தயாராக உள்ளதாகவும், எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பதிலளிப்பார் என்றும் மத்திய அரசு தெரிவித்து வருகிறது.

ஆனால், அதை ஏற்காத எதிர்க்கட்சிகள், பிரதமரே விளக்கமளிக்க வேண்டும் எனக் கூறி தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன. அதன் காரணமாக, நாடாளுமன்ற அவைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகளின் அமளிக்கு மத்தியில் ஒருசில மசோதாக்களை மத்திய அரசு நிறைவேற்றியது.



மக்களவையில் புதன்கிழமை கோஷம் எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.

இந்நிலையில், பாஜக தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, திரிணமூல் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைக் கொண்ட 'இந்தியா' கூட்டணி முடிவெடுத்தது. அதன்படி, காங்கிரஸ் எம்.பி. கௌரவ் கோகோய் மக்களவை அலுவல் விதி 198-இன் கீழ் நம்பிக்கையில்லா தீர்மானத்தை புதன்கிழமை மக்களவையில் தாக்கல் செய்தார்.

**எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஆதரவு:** தீர்மானம் தொடர்பான அறிக்கையை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா வாசித்தார். விதிப்படி, நம்பிக்கையில்லா தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் குறைந்தபட்சம் 50 எம்.பிக்கள் ஆதரவளிக்க வேண்டும். அதையடுத்து, காங்கிரஸ் எம்.பி. கோகோய் மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது உறுப்பினர்களின் ஆதரவைக் கோரினார்.

அதற்கு 'இந்தியா' கூட்டணியைச் சேர்ந்த கட்சிகளின் எம்.பிக்கள் எழுந்து நின்று ஆதரவு தெரிவித்தனர். காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா, திமுக எம்.பி. டி.ஆர்.பாலு, தேசியவாத காங்கிரஸின் சுப்ரியா சுலே உள்ளிட்டோரும் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். போதிய எண்ணிக்கையிலான எம்.பிக்கள் ஆதரவளித்ததால், நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்தார்.

அவையில் உள்ள கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு, நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது விவாதம் நடத்துவதற்கான தேதி முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அத்தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றபிறகு, பிரதமர் மோடி அதற்கு பதிலளிப்பார். அதன் பிறகு தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

**கடைசி ஆயுதம்:** மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை வெற்றி பெறச் செய்வதற்குத் தேவையான எம்.பிக்கள் எதிர்க்கட்சிகளிடம் இல்லை. இருந்தபோதிலும், மணிப்பூர் வன்முறை விவகாரம் தொடர்பாகத் தொடர்ந்து அமைதிகாத்து வரும் பிரதமர் மோடியைப் பேசவைப்பதற்கான கடைசி ஆயுதமாகவே நம்பிக்கையில்லா தீர்மானத்தைத் தாக்கல் செய்துள்ளதாக காங்கிரஸ் கொறடா மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

**பி.ஆர்.எஸ். தனி தீர்மானம்:** மத்திய அரசுக்கு எதிராக பாரத ராஷ்டிர சமிதி (பிஆர்எஸ்) தரப்பில் தனியாக நம்பிக்கையில்லா தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. அக்கட்சி எம்.பி. நம நாகேஸ்வர் ராவ் அத்தீர்மானத்தைத் தாக்கல் செய்தார். பிஆர்எஸ் கட்சியானது எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அன்றே கணித்த பிரதமர் மோடி! வைரலாகும் காணொலி

மத்திய பாஜக அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்துள்ள நிலையில், 2023–ஆம் ஆண்டில் நம்பிக்கையில்லா தீர்மானத்தைத் தாக்கல் செய்யத் தயாராகுமாறு 2019–ஆம் ஆண்டிலேயே மக்களவையில் பிரதமர் மோடி பேசிய காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கடந்த 2019–ஆம் ஆண்டில் மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் மோடி, '2023–ஆம் ஆண்டில் பாஜக அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைத் தாக்கல் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்க எதிர்க்கட்சிகளுக்கு வாழ்த்துகிறேன். அதற்கு எதிர்க்கட்சிகள் தயாராகிக் கொள்ள வேண்டும்' எனத் தெரிவித்திருந்தார்.

அது தற்போது உண்மையாகி உள்ளதையடுத்து, பிரதமர் மோடி பேசும் அந்தக் காணொலியானது சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பாஜக 303 தொகுதிகளைப் பெற்று தொடர்ந்து 2–ஆவது முறையாக ஆட்சி அமைத்தது குறிப்பிடத்தக்கது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# 300 மருந்துகள் அட்டையில் ‘க்யூ ஆர்’ குறியீடு

## போலிகள் புழக்கத்தைத் தடுக்க ஆக.1 முதல் புதிய நடைமுறை

**சென்னை, ஜூலை 26:** போலி மருந்துகள் புழக்கத்தைத் தடுக்கும் நோக்கில் 300 மருந்துகளின் அட்டையில் பிரத்யேக குறியீடு (க்யூ ஆர் கோடு) அச்சிட்டு விற்பனை செய்யும் நடைமுறை ஆக 1-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

அதன்படி, சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், இதய நோய்கள், காய்ச்சல், தலைவலி, சளி, இருமல் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளுக்கு நோயாளிகள் அன்றாடம் பயன்படுத்தும் முக்கிய நிறுவனங்களின் வர்த்தகப் பெயரிலான மருந்துகள் க்யூ ஆர் குறியீடுடன் சந்தைக்கு வரவுள்ளன.

அவற்றில்டோலோ,ஆக்மென்டின், ஆஸ்தாலின், அலெக்ரா, லிம்சி, கார்ல்பால்,தைரோநார்ம், கோரெக்ஸ் போன்ற வர்த்தகப் பெயரிலான மருந்துகள் முக்கியமானவை.

இந்தியா முழுவதும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகை மருந்து, மாத்திரைகளும் மத்திய, மாநில மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. அதேபோல், போலி மருந்துகளும் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அந்த வகையில், மாதந்தோறும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் பல மருந்துகள் தரமற்றவையாக இருப்பது கண்டறியப்பட்டு பட்டியலிடப்படுகின்றன.

இந்த நிலையில், முன்னணி வர்த்தகப் பெயரிலான மருந்துகளின் தரத்தை உறுதி செய்யும் நோக்கில் மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் சில மாதங்களுக்கு முன்பு ஓர் அறிவிப்பை வெளியிட்டது.

அதன்படி, முக்கியமான 300 மருந்துகளின் அட்டைகளில் க்யூ ஆர் கோடு அல்லது பார் கோடுகளை அச்சிட வேண்டும் என்றும், அதை ஸ்கேன் செய்யும்போது மருந்தின் உண்மைத் தன்மையை நுகர்வோர் அறிந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த நடைமுறை ஆக. 1 முதல் அமலுக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதற்கான விளக்கங்களை மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ளது.

க்யூ ஆர் கோடு மட்டுமல்லாது மருந்தின் உட்கூறுகள் விவரம், தயாரிப்பாளர்கள் விவரம், உற்பத்தி தொகுதி (பேட்ச்), உற்பத்தி தேதி, காலாவதி தேதி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இடம் பெற்றிருத்தல் அவசியம் என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆக. 1-ஆம் தேதிக்குப் பிறகு தயாரிக்கப்படும் சம்பந்தப்பட்ட 300 மருந்துகளுக்கும் இது பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க்யூ ஆர் கோடு அச்சிடப்பட வேண்டிய மருந்துகளின் விவரங்கள் https://cdsco.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

# கார்கில் வெற்றி தினம் கடைப்பிடிப்பு

**சென்னை, ஜூலை 26:** 24-ஆவது கார்கில் போர் வெற்றி தினத்தையொட்டி, அந்தப் போரில் வீர மரணம் அடைந்தவர்களுக்கு சென்னை போர் நினைவுச் சின்னத்தில் லெப்டினன்ட் ஜெனரல் கரண்பீர் சிங் பிரார் உள்ளிட்ட முப்படை உயரதிகாரிகள் புதன்கிழமை மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

காஷ்மீர் எல்லையில் உள்ள கார்கில் பகுதியில் ஆக்கிரமிக்க முயன்ற பாகிஸ்தான் ராணுவத்தினரை விரட்டியடித்து இந்திய ராணுவம் 26 ஜூலை 1999-ஆம் ஆண்டு வெற்றிக் கொடி நாட்டியது.

'ஆபரேஷன் விஜய்' என அறியப்படும் கார்கில் போரில் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஜூலை 26-ஆம் தேதி கார்கில் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக, சென்னை போர் நினைவுச் சின்னத்தில் லெப்டினன்ட் ஜெனரல் கரண்பீர் சிங் பிரார் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மேலும், முப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.



கார்கில் போர் வெற்றி தினத்தையொட்டி, சென்னையில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் புதன்கிழமை மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்திய லெப்டினென்ட் ஜெனரல் கே.எஸ்.பிரார்.

**அமைதியே சிறந்த தீர்வு:** தொடர்ந்து, கார்கில் போரில் மேஜராக பணியாற்றிய கர்னல் பீட்டர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

தில்லியில் ராக்கெட் ரெஜிமண்டில் பணியாற்றிய போது, கார்கில் போர் நிகழ்ந்தது. அந்த போரில், சுமார் 14 ஆயிரம் அடி உயரத்தில் ஆயுதங்களுடன் போர் புரிந்தோம்.

அப்போது மலையின் மீது ஆக்ஸிஜனும், பனிப்பொழிவும் பெரும் சவாலாக இருந்தன. போரை விட அமைதியே சிறந்த தீர்வாகக் கருத வேண்டும். இருந்தாலும், சில நேரங்களில் போர் அவசியமாகிறது. எந்தப் பணியில் இருந்தாலும் இளைஞர்கள் தங்கள் உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும் என்றார் அவர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சதுப்புநில காடுகள் தினம்: கடலோர மாவட்டங்களில் மரக்கன்றுகள் நடவு

**சென்னை, ஜூலை 26:** உலக சதுப்பு நிலக்காடுகள் தினத்தை முன்னிட்டு, தமிழக வனத் துறை சார்பில் கடலோர மாவட்டங்களில் சதுப்புநில மரக்கன்றுகள் நடவு செய்யும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

உலக சதுப்பு நிலக்காடுகள் தினத்தை முன்னிட்டு, தமிழக வனத் துறை சார்பில் சென்னையை அடுத்த கோவளம் கடற்கரை, திருவள்ளூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், விழுப்புரம், ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் பள்ளி மாணவர்கள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனம், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று சதுப்புநில மரக்கன்றுகளை நடவு செய்தனர்.

மாவட்ட வன அலுவலர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அவிசினியா, ரைசோபோரா போன்ற 10 ஆயிரம் சதுப்புநில மரக்கன்றுகள் நடவு செய்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு மற்றும் சதுப்பு நிலக்காடுகளின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

# வழி காட்டுகிறது பிரான்ஸ்

**எஸ். ஸ்ரீதுரை**

பிரான்ஸ் தேசத்தின் தென் பகுதியிலுள்ள சிறிய நகரமாகிய மாண்ட்பெல்லியர் மிக முக்கியமான மாற்றம் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

வரும் டிசம்பர் முதல் தேதியிலிருந்து அந்நகரத்தின் உள்ளூர் பொதுப் போக்குவரத்துத் தடங்களில் அந்நகர மக்கள் முற்றிலும் இலவசமாகப் பயணிக்கலாம்.

பொதுமக்கள் தங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் பயணிப்பதால், அந்நகரில் காற்று மாசுபாடு அதிகரித்து வருவதைத் தடுப்பதுடன், முக்கிய சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்கும் நோக்கத்துடனும் அந்நகர நிர்வாகம் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

இத்திட்டம் எந்த அளவுக்கு வரவேற்பைப் பெறக் கூடும் என்பதை அறிந்து கொள்வதற்காக 2020- ஆம் ஆண்டில் சில மாதங்கள் வார இறுதி நாள்களில் இலவச பொதுப் போக்குவரத்தைச் செயல்படுத்தியதுடன், 2021- ஆம் ஆண்டில் சில மாதங்கள் மாணவர்களுக்கு மட்டுமான இலவசப் பயணத்தை அறிமுகப்படுத்தியது.

மேற்கண்ட முன்னெடுப்புகளின் மூலம், இத்திட்டத்துக்கு வரவேற்பு இருப்பது உறுதியானதை அடுத்து, புதிய மாற்றத்தை மாண்ட்பெல்லியர் நகர நிர்வாகம் எடுத்துள்ளது.

சுமார் மூன்று லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இந்நகரத்தின் சுற்றுச்சூழலும், சுவாசிக்கிற காற்றின் தூய்மையும் மேம்படுவதற்கு இந்த நடவடிக்கை மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல், இதற்காக, நகரத்தின் ஊடாகச் செல்லும் சாலைகளின் இருபுறங்களிலும் மிதிவண்டிகள் இடையூறின்றிச் செல்வதற்கான தனிப்பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. டிராம், நகரப் பேருந்து ஆகியவற்றில் பயணிக்காத பொதுமக்கள் புகை கக்கும் தானியங்கி வாகனங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மிதிவண்டிகளை அதிக அளவில் பயன்படுத்த இத்தகைய சாலைகள் வழிவகுக்கும். மிதிவண்டிப் பயணம் என்பது ஆரோக்கிய வாழ்வுக்கான முக்கியக் காரணி என்பதைத் தனியே சொல்லத் தேவையில்லை.

மேற்கண்ட திட்டத்துக்கான நிதியாக மாண்ட்பெல்லியர் நகர நிர்வாகம் பதினைந்து கோடி யூரோ நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

பிரான்ஸை பொருத்தவரையில் உள்ளூரில் இலவச பொதுப் போக்குவரத்து என்பது புதிய விஷயமல்ல. 2015 -ஆம் ஆண்டு பிரான்ஸ் அரசு போக்குவரத்து நிர்வாகத்தை உள்ளாட்சி அமைப்புகள் வசம் ஒப்படைத்ததிலிருந்து இதுவரையில் சுமார் 39 நகராட்சிகள் இலவச உள்ளூர் பொதுப் போக்குவரத்தை அமல்படுத்தியுள்ளன.

இதற்கான செலவுகளை ஈடுகட்டுவதற்காக 10-க்கும் மேற்பட்ட பணியாளர்களைப் பணியமர்த்தியுள்ள தொழில் - வணிக நிறுவனங்களிடமிருந்து சிறப்பு வரி ஒன்று வசூலிக்கப்பட்டு வருகிறது. இக்காரணத்தினால், அந்நகராட்சிகள் நிதிச்சுமைக்கு ஆளாவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் பெட்ரோல், டீசல் முதலியவற்றுக்காகப் பொதுமக்கள் செலவிடும் தொகை கணிசமாகக் குறைகிறது. ஏழை எளிய மக்கள் தங்களின் போக்குவரத்துக்காக செய்யும் செலவு குறைந்து, அத்தொகை அவர்களுடைய உணவு உள்ளிட்ட தேவைகளுக்குத் திருப்பிவிடப்படுவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் உறுதிப்படுகிறது.

இவை அனைத்துக்கும் மேலாகப் புவி வெப்பமாதல், காற்றுமாசுபடுதல் உள்ளிட்ட பாதிப்புகள் சிறிது சிறிதாகக் குறைந்து மக்களின் ஆரோக்கியம் காக்கப்படுகிறது.

எல்லாம் சரி. நமது இந்தியநாட்டின் நகரங்களிலும் இத்தகைய இலவச பொதுப் போக்குவரத்துத் திட்டத்தைக் கொண்டுவர இயலாதா என்னும் கேள்வி நம் முன்னால் எழுந்தாலும், அது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

இத்திட்டம் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டுள்ள பிரான்ஸிலேயே பாரிஸ், லியோன் போன்ற பெருநகரங்களின் நிர்வாகங்கள் இதைச் செயல்படுத்தத் தயங்குகின்றனவாம். உள்ளூர் பொதுப் போக்குவரத்தின் மூலம் கிடைக்கும் கணிசமான லாபத்தை இழக்க விரும்பாத பெருநகர நிர்வாகங்கள், மக்கள் நெரிசல் குறைவாக உள்ள புறநகர்ப் பகுதிகளில் மட்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றனவாம்.

நம் நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களிலும் எத்தனையோ இலவசத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றுள், நியாய விலைக் கடைகள் மூலம் இலவச உணவுத் தானியங்கள் வழங்கும் திட்டம், முதியோர் ஓய்வூதியம் போன்ற நலத்திட்டங்கள், பள்ளிக்குழந்தைகளுக்கான மதிய உணவு உள்ளிட்ட இலவசத் திட்டங்கள், அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் இலவச மருத்துவம் உள்ளிட்டவை நியாயமான திட்டங்கள் என்றால், வாக்கு வங்கி அரசியலுக்காக முன்னெடுக்கப்படும் வேறு பல இலவசத் திட்டங்கள் மாநில அரசுகளின் நிதியாதாரத்தையே ஆட்டம் காண வைக்கின்றன. பெண்களுக்கான இலவச பேருந்து வசதி அமல்படுத்தப்பட்டுள்ள மாநிலங்களின் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் அரசு வழங்கும் மானியங்களை நம்பி இருப்பதையும் காண்கின்றோம்.

இந்நிலையில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் இலவசத் திட்டங்களை புகார்களுக்கு இடமில்லாமல் தொடர்ந்து செய்து வந்தாலே அது பாராட்டுக்குரியதாகப் பார்க்கப்படும். மேலும், போக்குவரத்து என்பது உள்ளாட்சி நிர்வாகங்களின் கீழ் வராத நிலையில், பிரான்ஸைப் போன்று முழுமையான இலவச பொதுப் போக்குவரத்தை அமல்படுத்துவது இயலாத காரியமே.

இதற்குப் பதிலாக, மாநில அரசுகளின் போக்குவரத்துக் கழகங்களும், மத்திய அரசின் ரயில்வே அமைச்சகமும் செலவு குறைந்த, அதே சமயம் வசதியான, பாதுகாப்பான பொதுப் போக்குவரத்தை வழங்க மேலும் முன்வர வேண்டும்.

சாலை வசதிகளை மேம்படுத்துவதும் முக்கியம். இவற்றைச் செய்வதன் மூலம் பொது மக்கள் முன்னைவிட அதிக அளவில் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிக்க வேண்டும். மேலும், பொதுமக்கள் மிதிவண்டிகளை அதிகமாகப் பயன்படுத்துவதற்கான முன்னெடுப்புகளைத் தொடங்குவதும் அவசியம்.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் உலக வெப்பமயமாதல், அதிகரிக்கும் காற்று மாசு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதில் நமது நாடும் கணிசமான பங்கு வகிக்க முடியும்.

பிரான்ஸ் நாட்டின் சிறுநகர நிர்வாகங்களின் நடவடிக்கைகள் மூலம் நாம் கற்க வேண்டிய பாடம் இதுவேயாகும்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மத்தியதரைப் பிராந்திய காட்டுத் தீ: 40-ஐ கடந்த பலி

**ரோம், ஜூலை 26:** அல்ஜீரியா, இத்தாலி, கிரீஸ் ஆகிய மத்தியதரைப் பிராந்திய நாடுகளில் பரவி வரும் காட்டுத் தீயில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40-ஐ கடந்துள்ளது.

இது குறித்து பிபிசி ஊடகம் தெரிவித்துள்ளதாவது:

கடந்த சில நாள்களாக வீசி வரும் வெப்ப அலை காரணமாக, அல்ஜீரியா, இத்தாலி, கிரீஸ் ஆகிய நாடுகளில் காட்டுத் தீ தீவிரமாகப் பரவி வருகிறது.

இதில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40-ஐக் கடந்துள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

கிரீஸுக்கு சொந்தமான ரோட்ஸ் தீவில் காட்டுத் தீ காரணமாக அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் கோர்ஃபு மற்றும் எவியா பகுதிகளிலும் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகிறது.

அந்தப் பிராந்தியத்தில் வெப்ப அலையின் தீவிரம் இன்னும் குறையாததால், கிரீஸின் சில பகுதிகளில் வெப்ப நிலை 111 டிகிரியைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாலியின் சிசிலி, புக்லியா ஆகிய பகுதிகளிலும் காட்டுத் தீ காரணமாக ஆயிரக்கணக்கானோர் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.



துனிசியாவின் மலைப் பகுதியில் காட்டுத் தீயால் எழுந்த புகைமண்டலம்.

வேகமாக வீசிவரும் காற்றும், வெப்பத்தால் காய்ந்து போன மரம், செடி கொடிகளும், காட்டுத்தீயை கட்டுப்படுவத்துவதில் தீயணைப்பு வீரர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதிகபட்சமாக அல்ஜீரியாவில் 34 பேர் காட்டுத்தீக்கு பலியாகியுள்ளனர். அவர்களில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து பொதுமக்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 10 ராணுவ வீரர்களும் அடங்குவர்.

அந்த நாட்டில் 80 சதவீத காட்டுத் தீ அணைக்கப்பட்டுவிட்டதாக அரசு அறிவித்தாலும், தொடர்ந்து பரவி வரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் பணிகளில் 8,000 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அண்டை நாடான துனீசியாவிலும் சில இடங்களில் காட்டுத் தீ பரவி வருவதால் அங்கிருந்து சுமார் 800 பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் அண்மையில் வீசிய 'சர்பரஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள 'எதிர்ப் புயல்' காரணமாக அங்கு வெப்ப அலை வீசி வருகிறது.

பொதுவாக, வளிமண்டலத்தில் ஏற்படும் குறைந்த அழுத்த மண்டலத்தைச் சுற்றிலும் காற்று வேகமாகச் சுழல்வதை புயல் என்கிறோம். அதுவே, உயர் அழுத்த மண்டலம் உருவாகி, அதைச் சுற்றிலும் காற்று மெதுவாக சுழல்வது 'எதிர்ப் புயல்' என்று கூறப்படுகிறது.

புயலின் மையப் பகுதி வேகமாக நகர்ந்து செல்லும். ஆனால், அதற்கு எதிரான தன்மை கொண்ட எதிர்ப்புயலின் மையப் புள்ளி மிக மிக மெதுவாக நகரும். சில பகுதிகளில் அது தற்காலிகமாக நிலைத்துகூட நின்றுவிடும்.

அதுபோன்ற நேரங்களில் காற்றில் ஏற்கெனவே இருக்கும் வெப்பம் இன்னும் அதிகரித்து அந்தப் பகுதிகளில் அதீத வெப்பநிலை ஏற்படும். அதைத்தான் வெப்ப அலை என்கிறோம்.

தற்போது ஐரோப்பாவில் 'சர்பரஸ்' எதிர்ப் புயல் காரணமாக ஏற்பட்டுள்ள வெப்ப அலைக்கு 'கேரன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக இத்தாலியின் 16 முக்கிய நகரங்களுக்கு அந்த நாட்டு அரசு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2003-ஆம் ஆண்டில் வீசிய வெப்ப அலைக்கு ஐரோப்பாவில் 70,000 பேர் பலியாகினர்.

அதன்பிறகு அங்கு கடந்த ஆண்டு ஏற்பட்ட வெப்ப அலை காரணமாக 62,000 பேர் உயிரிழந்தனர்.

பொதுவாக, அதிக வெப்ப நிலையால் வயோதிகள், உடல் நல பாதிப்பு உள்ளவர்கள் போன்றோரின் உயிரிழக்கும் அபாயம்தான் அதிகமாக இருக்கும். ஆனால், வெப்ப அலையால் ஆரோக்கியமான மனிதர்கள் கூட இறக்கும் அபாயம் அதிகம் என்று கூறப்படுகிறது.

## விழுந்து நொறுங்கிய தீயணைப்பு விமானம்

**ரோட்ஸ், ஜூலை 26:** கிரீஸின் ரோட்ஸ் தீவில் பற்றியெரிந்து வரும் காட்டுத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த விமானம் விழுந்து நொறுங்கியதில், அதிலிருந்த இரு விமானிகளும் உயிரிழந்தனர்.

காட்டுத்தீயை அணைப்பதற்காக நீரைப் பாய்ச்சிக்கொண்டிருந்தபோது அந்த விமானத்தின் வால் பகுதி ஒரு மரத்தின் கிளையில் சிக்கி இந்த விபத்து ஏற்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.



தீயணைப்பு விமானம் விழுந்து நொறுங்குவதற்கு முன்...

EVA STALIN IAS ACADEMY